இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 295 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 22 – வியாழக்கிழமை 05 ஜூன் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 295 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 22 - Thursday 05 June 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–ஆவது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வாரியத் தலைவர்கள் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–ஆவது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் வாரியத் தலைவர்கள் உடனிருந்தனர்.

## நம்மை எந்நாளும் வழிநடத்தும் நம் உயிர்நிகர்

# தமிழினத் தலைவர் கலைஞர் 102-ஆவது பிறந்தநாள்!

## திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

**சென்னை, ஜூன் 5 -**

**நம்மை எந்நாளும் வழிநடத்தும் நம் உயிர்நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-ஆவது பிறந்த நாளாம் ஜூன் 3 - “செம்மொழி நாள்” விழாவையொட்டி அண்ணா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலுள்ள அவரது திருவுருவச் சிலைக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-ஆவது பிறந்த நாள் - செம்மொழி நாளாக நேற்று முன்தினம் (3,6,2025) தமிழ்நாடு முழுவதும் கடைப்பிடிக்கப் பட்டது. சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலை மற்றும் திரு வுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–ஆவது பிறந்த நாளையொட்டி நேற்று முன்தினம் (3.6.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, கே.என்.நேரு, இ.பெரியசாமி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கே.ஆர்.பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன், டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், முன்னாள் அமைச்சர் க.பொன்முடி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, தயாநிதிமாறன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான கே.வி.தங்கபாலு, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், வாரியத் தலைவர்கள் உடனிருந்தனர்.

### பேரறிஞர் அண்ணா நினைவிடம்!

தமிழினத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாள், செம்மொழி நாளாக நேற்று முன்தினம் நாடெங்கும் கொண்டாடப் பட்டது. இதனையொட்டி, சென்னை மெரினாவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில், தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்!

இதைத்தொடர்ந்து தமிழினத்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத் திற்கு, சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மலர் தூவி மரியாதை செலுத் தினார். கலைஞரின் பிறந்தநாளையொட்டி, அவரது நினைவிடத்தில் திருவுருவப் படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, செம் மொழி நாள் என்று எழுதப்பட்டுள்ளது. பேனாவும் அங்கு வைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலை ஞர் நினைவிடத்தில் பணிபுரியும் காவ லாளிகள், தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

### கோபாலபுரம், கலைஞர் இல்லம்!

முன்னதாக, சென்னை கோபாலபுரம் இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரி யாதை செலுத்தினார்.

துர்கா ஸ்டாலின், செல்வி செல்வம், இயக்குநர் அமிர்தம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) உள்ளிட்ட குடும்பத்தினரும் முத்தமிழறி ஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தினர்.

இதேபோல், கோபாலபுரம் இல்லத் தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மு.க.தமிழரசு, மோகனா தமிழரசு உள்ளிட்டோரும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்..

### முரசொலி வளாகம்!

இதனைத் தொடர்ந்து, சென்னை கோடம்பாக்கம் முரசொலி அலுவலகத் திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

### அண்ணா அறிவாலயம்!

அதன்பின்னர், சென்னை அண்ணா அறிவாலயத்திற்கு வருகை புரிந்த முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முத் தமிழறிஞர் கலைஞரின் சிலை அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவு ருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்தவர்களுக்கு இனிப்பு களை வழங்கி மகிழ்ந்தார்.

### சி.ஐ.டி. காலனி இல்லம்!

மேலும் சென்னை சி.ஐ.டி. காலனி இல்லத்திற்குச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அங்கு அலங் கரித்துவைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மரி யாதை செலுத்தினார். அதுபோது திருமதி. இராஜாத்தி அம்மாள் உடனிருந்தார்.

### ஓமந்தூரார் அரசினர் தோட்டம்!

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு அருகே அமைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத் திற்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தி னார். அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உள்ளிட்டோரும் முத்தமிழறி ஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மரியாதை செலுத்தினார்கள்.

### தமிழ்நாடு முழுவதும் நலஉதவிகள் வழங்கல்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-ஆவது பிறந்த நாள் - செம்மொழி நாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் ஆங்காங்கே கலைஞர் அவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தியதுடன் கழகக் கொடியேற்றி பொதுமக்களுக்கு நல உதவிகளை வழங்கி சிறப்பாகக் கொண்டாடினர்.

## ‘கலைஞரின் உடன்பிறப்புகள் எனப் பெருமை கொள்வோம்!’

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்!

**சென்னை, ஜூன் 5 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102-ஆவது பிறந்த நாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள தமது ‘எக்ஸ்’ தளப் பதிவில் “கலைஞரின் உடன்பிறப்புகள் எனப் பெருமை கொள்வோம்” எனப் பதிவிட்டுள்ளார்.**

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தன்னுடைய ‘எக்ஸ்’ தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

**“தாழ்ந்து கிடந்த தமிழ்நாட்டை உயர்த்திட, அறிவுச் சூரியனாய் வந்து தித்த தமிழினத் தலைவர் கலைஞரின் பிறந்த நாள்!**

**முச்சங்கம் கண்ட முத்தமிழுக்குச் செம்மொழிச் சிறப்பு செய்த முத்தமிழ்க் காவலரைப் போற்றிடும் செம்மொழி நாள்!**

**ஐந்து முறை முதலமைச்சராகத் தமிழ்நாட்டை ஆட்சி செய்து வரலாறு பல படைத்து இந்தியாவுக்கே வழிகாட்டும் பேரியக்கமான திராவிட முன்னேற்றக் கழகத்தை 50 ஆண்டுகள் வழிநடத்தி, ஒளியும் நிழலும் ஒருசேர வழங்கிய தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள் எனப் பெருமை கொள்வோம்!”**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ‘எக்ஸ்’ தளத்தில் பதிவிட்டிருக்கிறார்.

